குடும்பங்களுக்கு நிதி அளிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை நம்முடைய பாண்டியன் அவர்கள், இறந்தவர்களுடைய துணைவியார் மூலமாகப் பெற்றுத் தந்து இருக்கிறார். இருந்தாலும்கூட ஏற்கெனவே, நேற்றையதினமே மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக, தொழிலாளிகள் விபத்தில் இறந்துவிட்டால் அவர்களுக்கு 10,000 ரூபாய் அந்தக் குடும்பங்களுக்கு நிதி அளிக்கப்படும் என்று இந்த அரசு அறிவித்ததற்கேற்ப இறந்தவர்களுக்கு, நான்கு பேருக்கும் தலா 10,000 ரூபாய் வீதம் அந்தக் குடும்பங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. கால் இழந்தவருக்கு 7,000 ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

ராணி கிரானைட் நிறுவனத்தாரும், ஏலதாரரும் மற்றும் பணியை மேற்பார்வை செய்தவர்களும் முன்னெச்சரிக்கையோடு செயல்பட்டிருந்தால் இந்த விபத்து நடைபெற்று இருக்காது என்றும் அவர்களின் கவனக் குறைவும், அஜாக்கிரதையும் இவற்றை ஏற்படுத்தி இருக்கிறது என்றும் புகார் கூறப்பட்டதன் பேரில் 29—4—1990 அன்று இந்த வழக்கு 174, சி. ஆர். பி. சி. யிலிருந்து, பிரிவு 304-ஏ ஐ. பி. சி.-க்கு மாறுதல் செய்யப்பட்டு வழக்கு விசாரணையில் இருக்கிறது. எதிரிகளைக் கைது செய்யவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அவர்களுக்கு வேறு வகையிலும் வரவேண்டிய தொகைகளையும்பெற்றுத் தருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) நேப்பியர் பூங்காவில் நிறுவப்பட்டுள்ள மேதின நினைவுச் சின்னம் குறித்து.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் தலைவர் அவர்களே, கடந்த மே தினத்தின்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுவரையில் நேப்பியர் பூங்கா என்று அழைக்கப்பட்டு வந்த தற்போது மேதினப் பூங்கா என்று பெயர் சூட்டப்பட்டிருக்கும் இடத்தில், மே தின நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே இதைப்போல தொழிலாளர்களுக்கு அஞ்சலி செலுத்துகிற வகையில் ஒரு சின்னம் அமைக்கப்பட்டதில்லை என்றெல்லாம் அன்று பேசப்பட்டது.

இந்த தேசத்தின் உண்மையான சொத்தாக இருக்கும் அந்த உழைக்கும் வர்க்கத்திற்கு, அவர்களது உழைப்பையும் தியாகத்தையும் நினைவுகூர்கிற வகையிலும் தமிழகத்தின் தலைநகரில் இந்த நினைவுச்சின்னம் அமைப்பதிலே—எங்களை எல்லாம் அந்த

விழாவிற்கு முதலமைச்சர் அவர்கள் அழைக்கவில்லை என்றாலும் கூட—எங்கள் கட்சியை, மற்ற கட்சிகளை எல்லாம்—நாங்களும் அதை மனமாரப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

(10-00 மணி)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாங்கள் உங்களுக்குத் தீண்டத் தகாதவர்களாயிற்றே என்றுதான் அழைக்கவில்லை (சிரிப்பு).

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : ஆனால் தொழிலாளர்கள் எங்களுக்கும் வேண்டியவர்கள். (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவிரி மாத்திரம் வேண்டாததா?(சிரிப்பு).

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அழைக்கப்படவில்லை. அழைக்கப்படவேண்டும் என்ற மரபைப் பின்பற்ற வேண்டும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : நான் இதிலே இப்போது விவகாரத்திற்குள்ளே வரவில்லை. ஆனால் நினைவுச் சின்னத்திலே ஒரு சின்ன மாறுபாட்டைச் செய்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்தை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இரண்டு நாட்களாகக் கொண்டுவரத் துடித்தேன். நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இன்றுதான் அனுமதி கொடுத்தார்கள். அதிலே இருக்கிற துப்பாக்கி மேல் நோக்கி பார்த்துக்கொண்டு இருக்கிறது. மேல் நோக்கி இருக்கின்ற துப்பாக்கி என்றைக்குமே சுடுகின்ற துப்பாக்கி, அது சுடுகிற துப்பாக்கியாக இருக்கக்கூடாது. சுடப்பட்ட துப்பாக்கியாக இருக்கவேண்டும். அது கீழ் நோக்கி இருக்க வேண்டும். அது தான் அஞ்சலி செலுத்துகின்ற துப்பாக்கி, எதையுமே கூர்ந்து கவனிக்கின்ற முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இது எப்படி தப்பித்தது என்று தெரியவில்லை. ஆகவே முதலமைச்சர் அவர்கள் என்றுமே சுடுகின்ற துப்பாக்கியை ஏந்தாதவர்களாக இருக்கவேண்டும் என்று நாங்கள் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஆகவே அதை சுடப்பட்ட துப்பாக்கியாக ஆக்கித் தரும்படி அவர்களை பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, துப்பாக்கி மேல் நோக்கியா, கீழ்நோக்கியா என்பதல்ல பிரச்சினை; ஒரு பழமொழி கிராமத்திலே உண்டு. நரி வலம் போனால் என்ன, இடம் போனால் என்ன. மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி என்று, அதைப்போல, அது மேல் நோக்கியிரு-

தூரல் என்ன, கீழ்நோக்கியிருந்தால் என்ன, மேல் நோக்கினால் வானத்தைச் சுடும். கீழ்நோக்கினால் தரையைச் சுடும், ஆளைச் சுடாமல் எங்காவது ஒரு பக்கம் நோக்கி இருப்பது நல்லதுதான். (சிரிப்பு) இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய அந்த உணர்வை மதித்து அதைத் திருத்தம் செய்யலாமா என்று பரிசீலிக்கிறேன்.

(இ) மதுரையிலுள்ள சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்திலே இருக்கிற கூட்டுறவு வங்கிகளில் மிக முக்கியமான வங்கியாக கருதப்படுகிற சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கியில் அங்கேயிருக்கிற ஊழியர்கள் சம்பள உயர்வு போன்ற சில பிரச்சினைகளை வைத்து அவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள். அதனாலே மதுரை நகரத்தினுடைய நெசவாளர்களிடத்திலேயும் ஏழை, எளியவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணம் போன்ற பல்வேறு உதவிகள்கூட அந்த வங்கியின் மூலம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்தக் கோரிக்கைகள் நீண்டகாலமாக அந்த ஊழியர்களிடத்திலே இருந்து வந்து, பல்வேறு நேரங்களில் அரசு அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டும் கூட அந்த நிலை, அவர்களுக்குத் தர வேண்டிய சம்பள உயர்வுப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே ஒரு தடவை பதில் அளிக்கிற நேரத்தில் நிலவள வங்கிகள் நஷ்டத்தில் நடக்கின்றன, லாபத்தில் நடக்கிற வங்கியாக இருந்தால் அவர்களுக்கு உரிய லாபத்தில் கிடைக்க வேண்டிய அளவிற்கு பங்கை அவர்களுடைய ஊதிய உயர்வுக்கும் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அந்த வகையில் உடனடியாக அந்த வங்கியினுடைய ஊழியர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அரசு தலையிட்டு ஆவன செய்யவேண்டும். ஆவன செய்திருப்பார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட வங்கி, அதிலே உள்ள தொழிலாளர்கள் நான்கு கோரிக்கைகளை மையமாக வைத்து திடீரென்று 2-5-1990 ஆம் தேதி போராட்டத்திலே ஈடுபட்டார்கள். அவர்கள் எழுப்பிய அந்த நான்கு கோரிக்கைகளில் 2